**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – புதிய மாநில திட்டம் – அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – 2007–08 முதல் 2010–11 வரையிலான நான்காண்டு காலத்தில் செயல்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

அரசாணை (நிலை) எண். 94 நாள்: 6.7.2007

**படிக்கப்பட்டவை:**

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 4970/உ3 நாள் 23.3.2007, 10.4.2007 மற்றும் 3.5.2007

---

**<u>ஆணை:</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் தாக்கல் செய்தபின் 11.4.2007 அன்று பதிலளித்து பேசும்போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள நகர்ப்புற மக்கள் தொகையில் 28 விழுக்காட்டை கொண்டுள்ள பேரூராட்சிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப்பட வேண்டிய தேவை அதிகமாகி வருகிறது என்றும்,, பெரும்பான்மையான பேரூராட்சிகள் நிதி ஆதாரத்தில் நலிவுற்றவைகளாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, அரசு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் எனும் பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த நிதியாண்டு முதல் நடைமுறைப்படுத்தும் என்றும், பேரூராட்சிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த புதிய வசதிகளை உருவாக்கிடவும், குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால், சாலைகள், தெருவிளக்குகள், சுயஉதவிக் குழுக்களுக்கான பணிக்கூடங்கள், அலுவலகக் கட்டிடங்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூபாய் 35.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகள் ரூபாய் 50.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினால் பயன்பெறும் என்றும், நான்கு ஆண்டுகளில் ரூபாய் 200.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் அனைத்து பேரூராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்கள்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பேரூராட்சிகளின் இயக்குநர் மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் விரிவான கருத்துருக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார். 1981ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 439 பேரூராட்சிகள் ஊரக தன்மை கொண்டது எனக் கண்டறிந்து அவைகளில் 277 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு 100 சதவீத மான்யம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையில் 400 பேரூராட்சிகள் ஊரக தன்மை கொண்டது எனவும், அவைகளில் 178 பேரூராட்சிகள் நிதி

நிலைமையில் பின்தங்கியுள்ளதாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், பொதுவாக பெரும்பாலான பேரூராட்சிகளிலும் இதே நிலை தான் நிலவுகிறது. அதனால் பேரூராட்சிகளுக்கென ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள தனியாக ஒரு திட்டம் அத்தியாவசியமாகிறது என்றும், தெரிவித்து இத்திட்டத்தினை 4 வருடங்களில் அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தும் வகையில் கருத்துரு தயாரித்து அனுப்பியுள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருக்களை அரசு கவனமாகப் பரிசீலித்து "அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" (All Town Panchayats Anna Renaissance Scheme) என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்தலாம் என்று கருதுகின்றது . அவ்வாறே
2007–2008–ஆம் ஆண்டில் 140 பேரூராட்சிகளுக்கும் ( இணைப்பு– I உள்ளவாறு) ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூ.35.00 இலட்சம் வீதம் ரூ.49.00 கோடிகளை ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இப் புதிய திட்டம் கீழ்க்காணும் முறையில் செயல்படுத்த ஆணைகள் வெளியிடுகிறது:-

<u>நிதி ஒதுக்கீடு</u>

அ) ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகளுக்கு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூ. 35.00 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 49.00 கோடியும், நான்காவது ஆண்டில் 141 பேரூராட்சிகளுக்கு தலா ரூ. 35.00 இலட்சம் வீதம் ரூ. 49.35 கோடியும் ஆக 2007–08 முதல் 2010–11 வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு 561 பேரூராட்சிகளுக்கும் மொத்தமாக ரூ. 196.35 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.25 கோடி அரசு மானியமாக நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

ஆ) மேலே குறிப்பிட்டுள்ள ஓராண்டிற்கான செலவினம் ரூ. 49.00 கோடியில் ரூ. 25.00 கோடி அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அரசு மானியமாகவும், மீதம் ரூ. 24.00 கோடி மாநில நிதிக்குழு நிதியிலிருந்தும் (SFC Grant), வழங்க அரசு ஆணையிடுகிறது.

இ) இது தவிர ஒவ்வொரு பேரூராட்சியும் மேற்குறிப்பிட்டவாறு ஒவ்வொரு ஆண்டும் பெறும் ரூ. 35.00 இலட்சம் தவிர, குறைந்த பட்சம் ரூ. 15.00 இலட்சம் தொகை, மாநில நிதி பகிர்வு, 12வது நிதிக்குழு மான்யம், உள்ளிட்ட இதர நிதி ஆதாரங்களிலிருந்து இத்திட்டத்திற்கு செலவிட வேண்டும். மேற்கண்ட நிதியாதாரங்களின் மூலம் குறைந்தபட்சம் ரூ.15 இலட்சம் கூட திரட்ட இயலாத நிலையிலுள்ள பேரூராட்சிகளுக்கு, அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை (Infrastructure Gap Filling Fund under SFC Grants) யிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. மேலே பத்தி 4 (ஆ) –வில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு மானியம் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.25.00 கோடி வழங்கப்படுவதற்கு ஆணையிடப்படுகிறது. இதில் ரூ.5.00 கோடி கீழே குறிப்பிட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

" 4515.00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலத்தனச் செலவு 789 சிறப்பு கூறுகள் திட்டம் JC. சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 16 பெரும் பணிகள்"

( த.தொ. கு.எண்.4515 00 789 JC 1604)

ரூ.20. 00 கோடி கீழே குறிப்பிட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப் பட வேண்டும்:-

" 4515.00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலத்தனச் செலவு – 800 ஏனைய செலவு – JR. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 16 பெரும் பணிகள்"

( த.தொ. கு.எண்.4515 00 800 JR 1608)

மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய ரூ.24.00 கோடி குறித்து தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

6. (i) மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் சுருக்கம்

இவ்வாறு ஒவ்வொரு பேரூராட்சியும் அனைத்துப் பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தும்போது குறிப்பிட்ட ரூ.50.00 இலட்சத்தினை பின்கண்ட பணிகளுக்காக செலவு செய்தல் வேண்டும்:

| வ. எண் | முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் | தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | பேரூராட்சி பேருந்து செல்லும் பிரதான சாலை தார்சாலையாக இரண்டு பக்கங்களில் மழைநீர் கால்வாய், சாலைபிரிவு தடுப்பு (Center Median if space available) நடைபாதைகள் மற்றும் மின்சாரம் சேமிக்கும் விளக்குகள் (CFL Bulbs) கூடிய வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும். பேருந்து செல்லும் பிரதான சாலை நல்லமுறையில் அமைந்திருந்தால் அப்பேரூராட்சியில் உள்ள அதிக அளவில் பொதுமக்கள் உபயோகிக்கும் முக்கியமான சாலைகளை மேற்குறித்த அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும். | 10.00 |
| 2 | பேரூராட்சிகளின் பயன்பாட்டிற்கும், மேலும், சுய உதவிக் குழுக்கள் / பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளையும் கொண்ட சமுதாயக் கூடம் கட்டுதல் | 10.00 |
| 3 | பேரூராட்சி பகுதியில் உள்ள ஊரணி/குளம்/ குட்டை மேம்படுத்துதல் (தூர்வாறுதல், கரையை பலப்படுத்துதல், சிறுவர் விளையாடும் பூங்கா அமைத்தல், படித்துரை அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் உள்ளடங்கியது) | 5.00 |
| 4 | பேரூராட்சிகளில் குடிசை பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் குறுகிய சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைத்தல் | 5.00 |
| 5 | பேருந்து நிலையம்/ நாளங்காடிகள் / சந்தை கட்டுமான பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தல். | 10.00 |
| 6 | பேரூராட்சி பகுதியில் உள்ள சுடுகாடு/இடுகாடுகள் மேம்படுத்தல். (சுற்றுசுவர் அமைத்தல், பொது உபயோகக்கூடம், அணுகு சாலை அமைத்தல், மயான எரிமேடை அமைத்தல், விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல் மற்றும் பூங்கா போன்ற தோற்றம் அளிக்கும் வகையில் பணிகள் உள்ளடக்கியது) | 5.00 |
| 7. | பேரூராட்சிகள் தங்களது விருப்பப்படி அத்தியாவசிய தேவைக்கேற்ப பணிகளை மேற்கொள்ள | 5.00 |

| | | |
|---|---|---|
| | மொத்தம் | **50.00** |

**ii) மேற்காண் பணிகள் ஏற்கனவே முழுஅளவில் முடிவடைந்திருந்தால், முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள்**

| | |
|---|---|
| 1 | குடிநீர் ஆதாரங்கள்உருவாக்குதல் மற்றும் மேம்படுத்தல் |
| 2 | பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் / புதுப்பித்தல். |
| 3 | நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி கூடுதலாக தெருவிளக்குகள் அமைத்தல் |
| 4 | பூங்காக்கள் அமைத்தல் |
| 5 | பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் |

## நிபந்தனைகள்

1. இத்திட்டத்திற்கான நிதியிலிருந்து பொது பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளக் கூடாது. மின்கட்டணம் செலுத்துவதோ அல்லது திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவோ கூடாது.

2. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கென தனியே வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டும்.

3. வேலை நடைபெறும் இடங்களில், வேலைக்கான ஒப்பந்ததாரர் பெயர், மதிப்பீடு, வேலையின் பெயர், ஒப்பந்தக்காலம் மற்றும் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற விவரங்களடங்கிய விளம்பரப் பலகை தவறாமல் வைக்கப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு பேரூராட்சி அலுவலக வளாகத்திலும், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள அனைத்து வேலைகள் பெயர், ஒப்பந்தகாரரின் பெயர், வேலையின் மதிப்பு, காலம் ஆகியவைகளடங்கிய தகவல் பலகைகள் அமைத்தல் வேண்டும்.

5. வேலைகள் முன்னேற்றத்திலிருக்கும் போது வேலையின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. ஒரே வேலையை சிறு, சிறு பகுதியாகப் பிரித்து (Piecemeal) மேற்கொள்ளக் கூடாது.

7. உருவாக்கப்பட்ட சொத்துக்கள், உரிய சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டு சான்று அளிக்கப்படவேண்டும்.

8. வேலைகள், திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட வேண்டும்.

9. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் குறித்து திட்டமிடுதல், ஒப்புதல் பெறுதல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், செயல்படுத்துதல், முடிவறிக்கை, பயனீட்டுச் சான்று ஆகியவை குறித்து அறிக்கை அந்த ஆண்டிலேயே முடிக்கப்பட வேண்டும்.

**iii) <u>பேரூராட்சிகள் தேர்வு</u>**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளை தேர்வு செய்வதற்கு அந்தந்த மாவட்ட வாரியாக பேரூராட்சியின் மூன்றாண்டு சராசரி **(2004–05, 2005–06, 2006–07)** வரி மற்றும் வரியில்லா வருவாய் அடிப்படையாக கொள்ளப்படும். அதாவது சம்மந்தப்பட்ட பேரூராட்சியின் மேற்குறிப்பிட்ட வரி மற்றும் வரியில்லா இனங்களில் வசூலிக்கப்பட வேண்டிய தொகை (Collectible Demand) **2001**ம் ஆண்டின் மக்கள்தொகையால் வகுக்கப்பட்டு வரும் ஈவுத் தொகையின் அடிப்படையில் பேரூராட்சிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பட்டியலிடப்பட்டு அப்பட்டியலிலிருந்து ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மேற்கூறிய ஈவுத்தொகை குறைவாக உள்ள **25** சதவீத பேரூராட்சிகளை தேர்வு செய்து நான்கு ஆண்டுகளில் அனைத்து பேரூராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இவ்வாறு நான்கு ஆண்டுகளுக்குமாக தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் இவ்வாணையின் இணைப்புகள் I, II, III, மற்றும் IVல் உள்ளன. இப்பட்டியலே இறுதியானதாகும். இப்பட்டியலில் எவ்வித மாறுதல்களும் செய்யலாகாது. இவை பொதுமக்களின் பார்வைக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் விளம்புகை செய்யப்படல் வேண்டும்.

**iv) அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்வது குறித்த நெறிமுறைகள்.**

பேரூராட்சிகளில் மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தேவைப்படின் ஆலோசகரின் (Consultant) உதவியுடன் விரிவான ஆய்வு செய்யப்பட்டு, பேரூராட்சியின் அடிப்படை வசதிகளை ஆய்ந்தறிந்து பேரூராட்சி மறுமலர்ச்சி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாவட்ட கண்காணிப்புக் குழுவின் வாயிலாக பேரூராட்சிகளின் இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படல் வேண்டும். துறைத்தலைவர் இந்த அரசு ஆணையில் குறிப்பிட்ட வரைமுறைகளின்படி திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டதை உறுதி செய்து கொண்ட பின் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**v) <u>மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு</u>**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும், பிற திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கண்காணிப்புக் குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட ஆட்சியர் | – | தலைவர் |
| 2. திட்ட அலுவலர் | – | உறுப்பினர் |
| 3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் | – | உறுப்பினர்–செயலர் |
| 4. கண்காணிப்புப் பொறியாளர்/ செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | – | உறுப்பினர் |
| 5. தமிழ்நாடு மின்வாரிய துணை பொறியாளர்/ உதவி செயற் பொறியாளர் | – | உறுப்பினர் |
| 6. துணை இயக்குநர், மருத்துவத் துறை | – | உறுப்பினர் |
| 7.சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள். | – | உறுப்பினர்கள். |

இந்தக் குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படல் வேண்டும். தேவைப்படும்போது வேறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை இக்குழு சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து கூட்டத்தில் பங்கேற்க அழைக்கலாம்.

**vi)** <u>பிற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல்</u>

பேரூராட்சி பொதுநிதி, சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி, சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜானா திட்ட நிதி போன்ற திட்டங்கள் வாயிலாக கிடைக்கும் நிதி மற்றும் மேற்கண்ட திட்டத்தின் கீழ் பெறப்படும் ஒதுக்கீடு ஆகியவற்றினை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படல் வேண்டும்.

**vii)** இத்திட்டத்திற்கென அரசு அளிக்கும் மானியத் தொகையினை சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்கவும் இத்திட்டத்தின் செயற்பாட்டிற்கு தேவையான கூடுதல் நெறிமுறைகள் வெளியிடவும் பேரூராட்சிகள் இயக்குருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு அறிக்கை ஒன்றினை துறைதலைவர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

8. மேலே பத்தி 4 (ஆ)–வில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் " புதிய பணித்" திட்டமாகக் கருதப்பட்டு சட்டமன்றப் பேரவை ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர் நோக்கி சில்லரைச் செலவின நிதியிலிருந்து முதலில் இச்செலவினத்தை ஏற்க முன்பணம் கோரும் கருத்துருவை உரிய படிவத்தில், அரசு நிதி (வ.செ, பொது 1) துறைக்கு அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இச் செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற வேண்டி 2007–2008–ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டில் இச்செலவினத்தைச் சேர்ப்பதற்காக உரிய கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேற்குறிப்பிட்ட புதிய கணக்குத் தலைப்புகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநரே மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

10. கணக்குகளில் மேற்கொள்ள புதிய கணக்கு தலைப்புகளைத் தொடங்குமாறு சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) / கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. 2008–2009, 2009 –2010, 2010–2011 ஆகிய வருடங்களில் இத்திட்டத்திற்கான நிதியை விடுவிக்க தேவையான கருத்துக்களை அனுப்பும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ப்படுகிறார்.

12. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 43211/நிதி (ந.நி (ம) கு.வ) , நாள் 6.7.2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 442 ( நானூற்று நாற்பத்து இரண்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கே.தீனபந்து**
**அரசு செயலாளர்**

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர்,சென்னை – 108
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
சிறப்பு ஆணையாளர் (ம) ஆணையாளர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை – 35
மாநில தலைமை கணக்காயர் (A&E) , சென்னை – 18
மாநில கணக்காயர் (Audit) , சென்னை – 18
மாநில கணக்காயர் (CAB) , சென்னை – 9
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –1
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்

நகல்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை 5
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்சசி (மற்றும்) உள்ளாட்சித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (ந.நி(ம) கு.வ / நிகு IV / வ.செ. பொது I / வ.செ. பொது II) துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1, அ.ந2, வ.செ மற்றும் பொது) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

இணைப்பு I

## அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2007–08

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பீன் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | காஞ்சிபுரம் மாவட்டம் | | | | | |
| 1 | 1 | உத்திரமேரூர் | தேர்வு | 23656 | 88.20 | 373 |
| 2 | 2 | கருங்குழி | முதல் | 11372 | 58.28 | 513 |
| 3 | 3 | குன்றத்தூர் | தேர்வு | 25007 | 140.85 | 563 |
| 4 | 4 | இடைக்கழிநாடு | இரண்டாம் | 25793 | 146.77 | 569 |
| 5 | 5 | மாங்காடு | முதல் | 19420 | 117.21 | 604 |
| 6 | 6 | மாமல்லபுரம் | சிறப்பு | 12345 | 75.15 | 609 |
| | திருவள்ளுர் மாவட்டம் | | | | | |
| 7 | 1 | ஆரணி | முதல் | 12614 | 29.70 | 235 |
| 8 | 2 | திருமழிசை | முதல் | 16291 | 46.38 | 285 |
| 9 | 3 | பொதட்டுர்பேட்டை | முதல் | 18715 | 59.20 | 316 |
| | வேலுார் மாவட்டம் | | | | | |
| 10 | 1 | உதயேந்திரம் | முதல் | 11567 | 5.53 | 48 |
| 11 | 2 | விளாப்பாக்கம் | முதல் | 8052 | 5.83 | 72 |
| 12 | 3 | தக்கோலம் | முதல் | 9908 | 8.47 | 85 |
| 13 | 4 | திமிரி | தேர்வு | 14953 | 14.50 | 97 |
| 14 | 5 | பென்னாத்துார் | முதல் | 8151 | 8.39 | 103 |
| 15 | 6 | அல்லாபுரம் | தேர்வு | 26948 | 32.02 | 119 |
| | திருவண்ணாமலை மாவட்டம் | | | | | |
| 16 | 1 | புதுப்பாளையம் | இரண்டாம் | 10005 | 7.22 | 72 |
| 17 | 2 | கீழ்பென்னத்துார் | முதல் | 12468 | 12.19 | 98 |
| 18 | 3 | களம்பூர் | தேர்வு | 13291 | 13.30 | 100 |
| | தருமபுரி மாவட்டம் | | | | | |
| 19 | 1 | பாப்பாரப்பட்டி | தேர்வு | 11276 | 17.24 | 153 |
| 20 | 2 | பொ.மல்லாபுரம் | முதல் | 11474 | 21.44 | 187 |
| | கிருஷ்ணகிரி மாவட்டம் | | | | | |
| 21 | 1 | நாகோஜனஉறள்ளி | இரண்டாம் | 8409 | 5.90 | 70 |
| 22 | 2 | கெலமங்கலம் | தேர்வு | 11052 | 20.96 | 190 |
| | சேலம் மாவட்டம் | | | | | |
| 23 | 1 | தெடாவூர் | முதல் | 7461 | 7.10 | 95 |
| 24 | 2 | செந்தாரப்பட்டி | முதல் | 13896 | 14.21 | 102 |
| 25 | 3 | கருப்பூர் | முதல் | 13880 | 15.96 | 115 |
| 26 | 4 | இடங்கணசாலை | முதல் | 29635 | 34.16 | 115 |
| 27 | 5 | அரசிராமணி | இரண்டாம் | 13815 | 15.97 | 116 |
| 28 | 6 | கீரிப்பட்டி | முதல் | 9164 | 11.01 | 120 |
| 29 | 7 | பெத்தநாயக்கன்பாளையம் | தேர்வு | 16396 | 19.71 | 120 |
| 30 | 8 | பூலாம்பட்டி | இரண்டாம் | 8999 | 11.82 | 131 |
| | நாமக்கல் மாவட்டம் | | | | | |
| 31 | 1 | ஆர் புதுப்பட்டி | இரண்டாம் | 11915 | 3.82 | 32 |
| 32 | 2 | பட்டணம் | முதல் | 8213 | 4.53 | 55 |
| 33 | 3 | காளப்பநாயக்கன்பட்டி | முதல் | 10278 | 11.06 | 108 |
| 34 | 4 | சீராப்பள்ளி | முதல் | 11753 | 13.79 | 117 |

## அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2007–08

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | ஈரோடு மாவட்டம் | | | | | |
| 35 | 1 | வடுகபட்டி | இரண்டாம் | 10921 | 3.58 | 33 |
| 36 | 2 | பள்ளிப்பாளையம் | முதல் | 6505 | 2.33 | 36 |
| 37 | 3 | ஒலகடம் | இரண்டாம் | 9370 | 4.97 | 53 |
| 38 | 4 | ஜம்பை | முதல் | 15011 | 8.63 | 58 |
| 39 | 5 | நல்லம்பட்டி | முதல் | 3656 | 2.12 | 58 |
| 40 | 6 | பி மேட்டுப்பாளையம் | முதல் | 9115 | 5.67 | 62 |
| 41 | 7 | கல்லன்கோவில் | முதல் | 8754 | 5.46 | 62 |
| 42 | 8 | பெத்தாம்பாளையம் | இரண்டாம் | 7120 | 4.45 | 63 |
| 43 | 9 | கே என் பாளையம் | இரண்டாம் | 10308 | 6.65 | 64 |
| 44 | 10 | வெள்ளோட்டம்பரப்பு | முதல் | 8131 | 5.36 | 66 |
| 45 | 11 | அரச்சலூர் | இரண்டாம் | 12343 | 8.68 | 70 |
| 46 | 12 | வெங்கம்புதூர் | தேர்வு | 7632 | 5.67 | 74 |
| 47 | 13 | மொடக்குறிச்சி | முதல் | 10052 | 7.49 | 75 |
| 48 | 14 | ஊஞ்சலூர் | இரண்டாம் | 2628 | 2.12 | 81 |
| | கோயம்பத்தூர் மாவட்டம் | | | | | |
| 49 | 1 | தென்கரை | இரண்டாம் | 7247 | 8.20 | 113 |
| 50 | 2 | தளி | இரண்டாம் | 6143 | 8.16 | 133 |
| 51 | 3 | செட்டிப்பாளையம் | இரண்டாம் | 8103 | 11.46 | 141 |
| 52 | 4 | கனியூர் | முதல் | 5836 | 8.33 | 143 |
| 53 | 5 | சமத்தூர் | முதல் | 5812 | 8.54 | 147 |
| 54 | 6 | கோட்டூர் | தேர்வு | 25261 | 42.91 | 170 |
| 55 | 7 | தாளியூர் | முதல் | 9658 | 16.66 | 173 |
| 56 | 8 | கொமரலிங்கம் | முதல் | 11769 | 20.58 | 175 |
| 57 | 9 | புலுவப்பட்டி | முதல் | 11964 | 21.02 | 176 |
| 58 | 10 | வேட்டைக்காரன்புதூர் | தேர்வு | 18360 | 32.53 | 177 |
| 59 | 11 | ஒடையகுளம் | முதல் | 11999 | 22.25 | 185 |
| 60 | 12 | சங்கராமநல்லூர் | இரண்டாம் | 9543 | 17.88 | 187 |
| 61 | 13 | ஆலாந்துரை | இரண்டாம் | 7130 | 14.13 | 198 |
| | நீலகிரி மாவட்டம் | | | | | |
| 62 | 1 | உலிக்கல் | தேர்வு | 17054 | 10.48 | 61 |
| 63 | 2 | ஓவேலி | முதல் | 24793 | 15.37 | 62 |
| 64 | 3 | அதிகரட்டி | முதல் | 16003 | 10.53 | 66 |
| | கடலூர் மாவட்டம் | | | | | |
| 65 | 1 | லால்பேட்டை | முதல் | 13817 | 11.05 | 80 |
| 66 | 2 | கிள்ளை | இரண்டாம் | 9899 | 12.16 | 123 |
| 67 | 3 | மேல்பட்டாம்பாக்கம் | முதல் | 6598 | 9.10 | 138 |
| 68 | 4 | பரங்கிப்பேட்டை | தேர்வு | 20912 | 30.99 | 148 |
| | விழுப்புரம் மாவட்டம் | | | | | |
| 69 | 1 | மரக்காணம் | முதல் | 19139 | 19.91 | 104 |
| 70 | 2 | கோட்டக்குப்பம் | தேர்வு | 24075 | 26.07 | 108 |
| 71 | 3 | திருவெண்னணநல்லூர் | முதல் | 8582 | 12.91 | 150 |

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2007–08

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | தஞ்சாவூர் மாவட்டம் | | | | | |
| 72 | 1 | வேப்பத்தூர் | இரண்டாம் | 7417 | 5.07 | 68 |
| 73 | 2 | மெலட்டூர் | முதல் | 8103 | 6.84 | 84 |
| 74 | 3 | திருவிடைமருதூர் | முதல் | 13765 | 12.14 | 88 |
| 75 | 4 | மேலதிருப்பந்துருத்தி | இரண்டாம் | 8412 | 7.58 | 90 |
| 76 | 5 | திருபுவனம் | முதல் | 14135 | 15.63 | 111 |
| 77 | 6 | திருநாகேஸ்வரம் | முதல் | 13797 | 15.84 | 115 |
| | நாகப்பட்டிணம் மாவட்டம் | | | | | |
| 78 | 1 | தலைஞாயிறு | முதல் | 11635 | 9.30 | 80 |
| 79 | 2 | திட்டச்சேரி | முதல் | 8490 | 9.19 | 108 |
| | திருவாரூர் மாவட்டம் | | | | | |
| 80 | 1 | நன்னிலம் | தேர்வு | 11056 | 25.62 | 232 |
| | திருச்சி மாவட்டம் | | | | | |
| 81 | 1 | பூவாளூர் | முதல் | 8906 | 6.47 | 73 |
| 82 | 2 | பாலகிருட்டிணம்பட்டி | முதல் | 8582 | 11.23 | 131 |
| 83 | 3 | பொன்னம்பட்டி | முதல் | 10660 | 21.49 | 202 |
| 84 | 4 | லால்குடி | தேர்வு | 23405 | 59.72 | 255 |
| | பெரம்பலூர் மாவட்டம் | | | | | |
| 85 | 1 | குறும்பலூர் | இரண்டாம் | 11126 | 12.65 | 114 |
| 86 | 2 | அரும்பாவூர் | இரண்டாம் | 11695 | 16.00 | 137 |
| | புதுக்கோட்டை மாவட்டம் | | | | | |
| 87 | 1 | ஆலங்குடி | தேர்வு | 10761 | 42.28 | 393 |
| 88 | 2 | அரிமளம் | முதல் | 7819 | 16.69 | 213 |
| | திண்டுக்கல் மாவட்டம் | | | | | |
| 89 | 1 | அய்யலூர் | முதல் | 15203 | 15.68 | 103 |
| 90 | 2 | பாலசமுத்திரம் | தேர்வு | 12305 | 12.77 | 104 |
| 91 | 3 | ஸ்ரீராமபுரம் | முதல் | 8933 | 12.22 | 137 |
| 92 | 4 | சித்தையன்கோட்டை | முதல் | 12099 | 18.32 | 151 |
| 93 | 5 | அம்மைநாயக்கனூர் | தேர்வு | 16604 | 26.78 | 161 |
| 94 | 6 | பாளையம் | தேர்வு | 13300 | 23.32 | 175 |
| | கரூர் மாவட்டம் | | | | | |
| 95 | 1 | மருதூர் | முதல் | 10214 | 6.54 | 64 |
| 96 | 2 | நங்கவரம் | முதல் | 16408 | 16.16 | 98 |
| 97 | 3 | கிருட்டிணராயபுரம் | இரண்டாம் | 10533 | 12.64 | 120 |
| | மதுரை மாவட்டம் | | | | | |
| 98 | 1 | அ.வெள்ளாளபட்டி | முதல் | 7088 | 4.13 | 58 |
| 99 | 2 | எழுமலை | முதல் | 14130 | 16.39 | 116 |
| 100 | 3 | உறாங்கிப்பட்டி | தேர்வு | 8136 | 12.27 | 151 |
| | தேனி மாவட்டம் | | | | | |
| 101 | 1 | பி மீனாட்சிபுரம் | இரண்டாம் | 7227 | 5.91 | 82 |
| 102 | 2 | பூதிப்புரம் | இரண்டாம் | 9626 | 11.89 | 124 |
| 103 | 3 | கெங்குவார்பட்டி | முதல் | 10592 | 14.18 | 134 |
| 104 | 4 | மார்க்கையன்கோட்டை | இரண்டாம் | 5829 | 8.73 | 150 |
| 105 | 5 | மேலச்சொக்கநாதபுரம் | இரண்டாம் | 11669 | 17.65 | 151 |

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2007–08

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பீன் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | இராமநாதபுரம் மாவட்டம் | | | | | |
| 106 | 1 | மண்டபம் | இரண்டாம் | 16343 | 10.84 | 66 |
| 107 | 2 | சாயல்குடி | இரண்டாம் | 12052 | 8.93 | 74 |
| | விருதுநகர் மாவட்டம் | | | | | |
| 108 | 1 | வி புதுப்பட்டி | இரண்டாம் | 16007 | 7.32 | 46 |
| 109 | 2 | எஸ் கொடிக்குளம் | இரண்டாம் | 11988 | 6.38 | 53 |
| 110 | 3 | சுந்தரபாண்டியம் | முதல் | 8549 | 6.82 | 80 |
| | சிவகங்கை மாவட்டம் | | | | | |
| 111 | 1 | நெற்குப்பை | இரண்டாம் | 5689 | 2.60 | 46 |
| 112 | 2 | நாட்டரசன்கோட்டை | முதல் | 6586 | 3.44 | 52 |
| 113 | 3 | கோட்டையூர் | முதல் | 10633 | 8.56 | 80 |
| | திருநெல்வேலி மாவட்டம் | | | | | |
| 114 | 1 | அச்சன்புதூர் | முதல் | 12406 | 3.30 | 27 |
| 115 | 2 | வடகரை கீழ்பிடாகை | முதல் | 17349 | 7.18 | 41 |
| 116 | 3 | கீழப்பாவூர் | தேர்வு | 20422 | 10.96 | 54 |
| 117 | 4 | ஏர்வாடி | முதல் | 14755 | 10.24 | 69 |
| 118 | 5 | பத்தமடை | முதல் | 14957 | 10.77 | 72 |
| 119 | 6 | பன்பொழி | இரண்டாம் | 8553 | 6.88 | 80 |
| 120 | 7 | சுந்தரபாண்டியபுரம் | இரண்டாம் | 7711 | 6.59 | 85 |
| 121 | 8 | ஆழ்வார்குறிச்சி | முதல் | 9459 | 8.13 | 86 |
| 122 | 9 | வாசுதேவநல்லூர் | முதல் | 19062 | 18.55 | 97 |
| | தூத்துக்குடி மாவட்டம் | | | | | |
| 123 | 1 | கானம் | இரண்டாம் | 3401 | 2.32 | 68 |
| 124 | 2 | ஆறுமுகனேரி | தேர்வு | 24856 | 25.61 | 103 |
| 125 | 3 | ஆத்தூர் | தேர்வு | 9464 | 10.95 | 116 |
| 126 | 4 | சாயர்புரம் | தேர்வு | 12771 | 17.79 | 139 |
| | கன்னியாகுமரி மாவட்டம் | | | | | |
| 127 | 1 | பாகோடு | முதல் | 22781 | 7.56 | 33 |
| 128 | 2 | பொன்மனை | தேர்வு | 13480 | 5.86 | 43 |
| 129 | 3 | வேர்கிளம்பி | முதல் | 18003 | 8.08 | 45 |
| 130 | 4 | கோதைநல்லூர் | முதல் | 15880 | 7.51 | 47 |
| 131 | 5 | கணபதிபுரம் | இரண்டாம் | 13711 | 6.88 | 50 |
| 132 | 6 | முளகுமூடு | இரண்டாம் | 18057 | 9.17 | 51 |
| 133 | 7 | குமாரபுரம் | முதல் | 13938 | 7.19 | 52 |
| 134 | 8 | அழகியபாண்டியபுரம் | இரண்டாம் | 12183 | 6.40 | 53 |
| 135 | 9 | ஆத்தூர் | இரண்டாம் | 11744 | 6.18 | 53 |
| 136 | 10 | கொல்லங்கோடு | முதல் | 34425 | 18.86 | 55 |
| 137 | 11 | கடையல் | முதல் | 19183 | 10.82 | 56 |
| 138 | 12 | இடைக்கோடு | முதல் | 23453 | 13.26 | 57 |
| 139 | 13 | திருவட்டாறு | முதல் | 18272 | 10.73 | 59 |
| 140 | 14 | கப்பியறை | இரண்டாம் | 13368 | 9.01 | 67 |

# இணைப்பு II

## அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2008–09

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | காஞ்சிபுரம் மாவட்டம் | | | | | |
| 1 | 1 | திருக்கழுக்குன்றம் | தேர்வு | 23715 | 147.06 | 620 |
| 2 | 2 | சிட்லப்பாக்கம் | தேர்வு | 25314 | 196.57 | 777 |
| 3 | 3 | பீர்க்கன்கரணை | இரண்டாம் | 17511 | 154.60 | 883 |
| 4 | 4 | திருநீர்மலை | முதல் | 19228 | 172.96 | 900 |
| 5 | 5 | அச்சரப்பாக்கம் | முதல் | 9023 | 85.71 | 950 |
| 6 | 6 | செவிலிமேடு | முதல் | 16125 | 154.03 | 955 |
| | திருவள்ளூர் மாவட்டம் | | | | | |
| 7 | 1 | ஊத்துக்கோட்டை | தேர்வு | 10626 | 35.84 | 337 |
| 8 | 2 | சின்னசேக்காடு | தேர்வு | 9738 | 33.47 | 344 |
| 9 | 3 | திருநின்றவூர் | தேர்வு | 29332 | 115.99 | 395 |
| | வேலூர் மாவட்டம் | | | | | |
| 10 | 1 | திருவலம் | முதல் | 7936 | 10.23 | 129 |
| 11 | 2 | காட்பாடி | தேர்வு | 14912 | 19.64 | 132 |
| 12 | 3 | காவேரிப்பாக்கம் | தேர்வு | 12545 | 17.51 | 140 |
| 13 | 4 | சேண்பாக்கம் | தேர்வு | 13390 | 19.02 | 142 |
| 14 | 5 | ஆலங்காயம் | தேர்வு | 16851 | 28.38 | 168 |
| 15 | 6 | பனப்பாக்கம் | முதல் | 10151 | 17.55 | 173 |
| | திருவண்ணாமலை மாவட்டம் | | | | | |
| 16 | 1 | பெரணமல்லூர் | இரண்டாம் | 5557 | 6.50 | 117 |
| 17 | 2 | வேட்டவலம் | முதல் | 13402 | 16.22 | 121 |
| 18 | 3 | கண்ணமங்கலம் | முதல் | 7316 | 10.69 | 146 |
| | தருமபுரி மாவட்டம் | | | | | |
| 19 | 1 | கம்பைநல்லூர் | முதல் | 10833 | 22.92 | 212 |
| 20 | 2 | கடத்தூர் | தேர்வு | 10184 | 21.80 | 214 |
| | கிருஷ்ணகிரி மாவட்டம் | | | | | |
| 21 | 1 | மத்தகிரி | தேர்வு | 15257 | 35.53 | 233 |
| | சேலம் மாவட்டம் | | | | | |
| 22 | 1 | வனவாசி | இரண்டாம் | 6780 | 9.24 | 136 |
| 23 | 2 | பேளூர் | முதல் | 9012 | 12.61 | 140 |
| 24 | 3 | வீரகனூர் | முதல் | 10547 | 15.67 | 149 |
| 25 | 4 | தேவூர் | முதல் | 8115 | 13.27 | 164 |
| 26 | 5 | கன்னங்குறிச்சி | தேர்வு | 14994 | 28.62 | 191 |
| 27 | 6 | கொளத்தூர் | தேர்வு | 10254 | 19.96 | 195 |
| 28 | 7 | வாழப்பாடி | தேர்வு | 16104 | 31.57 | 196 |
| 29 | 8 | பனமரத்துப்பட்டி | முதல் | 8125 | 16.04 | 197 |
| 30 | 9 | ஏத்தாப்பூர் | முதல் | 10058 | 19.99 | 199 |
| | நாமக்கல் மாவட்டம் | | | | | |
| 31 | 1 | வெங்கரை | முதல் | 8928 | 11.26 | 126 |
| 32 | 2 | நாமகிரிப்பேட்டை | தேர்வு | 21446 | 29.69 | 138 |
| 33 | 3 | சேந்தமங்கலம் | தேர்வு | 18116 | 27.53 | 152 |
| 34 | 4 | அத்தனூர் | முதல் | 9377 | 14.88 | 159 |
| 35 | 5 | படவீடு | தேர்வு | 10066 | 16.29 | 162 |

அனைத்துப்  பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2008–09

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | | நிலை | மக்கள் தொகை (2001ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி) | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ.லட்சத்தில்) | சராசரி தனி நபர் வருமானம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 |
| | ஈரோடு மாவட்டம் | | | | | |
| 36 | 1 | ஆவல் பூந்துரை | முதல் | 11243 | 9.44 | 84 |
| 37 | 2 | கிலாம்பாடி | இரண்டாம் | 6343 | 5.67 | 89 |
| 38 | 3 | சலங்கபாளையம் | முதல் | 14702 | 13.17 | 90 |
| 39 | 4 | காசிப்பாளையம் | முதல் | 8570 | 7.80 | 91 |
| 40 | 5 | கூகலூர் | தேர்வு | 11684 | 11.35 | 97 |
| 41 | 6 | அம்மாபேட்டை | இரண்டாம் | 9259 | 9.36 | 101 |
| 42 | 7 | கொளத்துப்பாளையம் | தேர்வு | 17438 | 19.09 | 109 |
| 43 | 8 | பாசூர் | முதல் | 3870 | 4.24 | 110 |
| 44 | 9 | எலாத்துார் | இரண்டாம் | 7678 | 8.62 | 112 |
| 45 | 10 | வாணிபுத்துார் | தேர்வு | 12207 | 14.21 | 116 |
| 46 | 11 | காஞ்சிக்கோயில் | முதல் | 11040 | 12.87 | 117 |
| 47 | 12 | ஆரியப்பபாளையம் | முதல் | 12462 | 14.90 | 120 |
| 48 | 13 | சின்னக்கம்பாளையம் | இரண்டாம் | 9694 | 12.44 | 128 |
| | கோயம்பத்துார் மாவட்டம் | | | | | |
| 49 | 1 | சூளேஸ்வரன்பட்டி | முதல் | 18211 | 36.21 | 199 |
| 50 | 2 | ஜமீன் ஊத்துக்குளி | தேர்வு | 14859 | 33.80 | 227 |
| 51 | 3 | தொண்டமுத்துார் | இரண்டாம் | 9340 | 23.48 | 251 |
| 52 | 4 | பேரூர் | முதல் | 7965 | 20.94 | 263 |
| 53 | 5 | சாமளாபுரம் | முதல் | 14705 | 39.06 | 266 |
| 54 | 6 | ஒத்தக்கால்மண்டபம் | முதல் | 10320 | 29.41 | 285 |
| 55 | 7 | எட்டிமடை | இரண்டாம் | 7543 | 21.55 | 286 |
| 56 | 8 | சர்க்கார்சாமக்குளம் | முதல் | 7982 | 23.43 | 294 |
| 57 | 9 | மதுக்கரை | சிறப்பு | 26441 | 78.70 | 298 |
| 58 | 10 | ஆனைமலை | தேர்வு | 16467 | 50.24 | 305 |
| 59 | 11 | மடத்துக்குளம் | தேர்வு | 20352 | 64.81 | 318 |
| 60 | 12 | திருமலையாம்பாளையம் | இரண்டாம் | 11136 | 35.70 | 321 |
| 61 | 13 | வேடப்பட்டி | முதல் | 9732 | 31.78 | 327 |
| | நீலகிரி மாவட்டம் | | | | | |
| 62 | 1 | தேவர்சோலா | தேர்வு | 23164 | 20.96 | 90 |
| 63 | 2 | ஜெகதளா | தேர்வு | 14677 | 19.86 | 135 |
| 64 | 3 | பிக்கட்டி | முதல் | 6774 | 10.15 | 150 |
| | கடலூர் மாவட்டம் | | | | | |
| 65 | 1 | ஸ்ரீமுஷ்ணம் | முதல் | 11992 | 18.34 | 153 |
| 66 | 2 | கெங்கைகொண்டான் | தேர்வு | 10483 | 19.66 | 188 |
| 67 | 3 | தொரப்பாடி | முதல் | 5523 | 10.46 | 189 |
| 68 | 4 | காட்டுமன்னார்கோயில் | தேர்வு | 22426 | 47.17 | 210 |
| | விழுப்புரம் மாவட்டம் | | | | | |
